OS No.39/2017

DW–1–ரேணுகா

த/பெ.

நாள். 12.02.2026

<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1.மார்க்காதர்சி நிதி நிறுவனத்தில் செல்வி எந்த வரவு செலவு வைத்துக் கொள்ளவில்லை என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பொது அதிகார முகவரை நியமித்தது குறித்து என் கணவருக்கு தான் தெரியும். வாதிக்கும் பொது அதிகார முகவருக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்று சொன்னால் எனக்கு தெரியாது. வாதியின் வழக்குரையில் மூன்றாவது மற்றும் நான்காவது பத்தியில் சொல்லி இருக்கும் விவரங்களை பற்றி ஞாபகம் இல்லை.

2. பொது அதிகார பத்திரத்தில் அசல் கிரைய பத்திரத்தை முகவர் வசம் ஒப்படைத்ததாக எந்த குறிப்பு காணப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய கிரைய பத்திரத்தில் வாதி வசம் ஒப்படைத்த அசல் கிரைய பத்திரத்தை என் வசம் ஒப்படைத்ததாக இருக்கிறதா என்று கேட்டால் இருக்கிறது. தற்போது அனைத்து அசல் ஆவணங்களும் யாரிடம் இருக்கிறது என்று கேட்டால் என்னிடம் தான் இருக்கிறது. அந்த அசல் ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் ஆமாம் ஒப்படைக்கவில்லை.

3. அதற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் இருக்கிறதா என்றால் நான் அசலை யாரிடமும் கொடுக்கவில்லை. நான் வருமான வரி கட்டினேன். வா சொத்தின் கிரயத்தை வருமான வரி கணக்கான 2010 முதல் 2011 வரை வருமான வரி ஆண்டுக்கான கணக்கில் காட்டி இருக்கிறேனா என்றால் காட்டியிருப்பேன் வருமான வரி கணக்குகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்று

சொன்னால் சரிதான் கேட்டிருந்தால் ஒப்படைத்து இருப்பேன் பாதிக்கு மாத வாடகையில் தாவா சொத்தினை கொடுத்திருப்பதாக நான் சொல்லி இருந்த போதிலும் அந்த மாத வாடகையை நான் என்னுடைய வருமான வரி கணக்கில் காட்டி இருக்கிறேன் என்றால் காட்டியிருப்பேன்.

4. வழக்கு சொத்தில் ஒரு வீடு இருக்கும் போது காலி இடமாக தாவாசத்தை காட்ட வேண்டிய அவசியம் என்னவென்று கேட்டால் பத்திரத்தில் இருக்கும் விபரத்தை அப்படியே கிரயத்தில் போட்டுக் கொண்டோம்நான் நேரில் சென்று தாவா சொத்தினை பார்க்கவில்லை என்றால் ஆமாம். வீட்டினை கிரைய பத்திரத்தில் காட்டினால் களப்பணி மேற்கொண்டு போது செல்விக்கு கிரையத்தை பற்றிய செய்தி எட்டும் என்பதற்காகவே நாங்கள் கிரைய பத்திரத்தில் வீட்டை காட்டவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

5.நான் என் கணவர் மற்றும் முதல் பிரதிவாதியாகிய மூவரும் சேர்ந்து மோசடியாகத்தான் கிரைய பத்திரத்தினை உருவாக்கி இருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. நான் பெருந்தொகையான ஐம்பது லட்சம் மற்றும் ஒரு கோடி கான சீட்டு போட்டிருப்பதால் தான் மேலாளருக்கு கமிஷன் கொடுக்க வேண்டும் என்பதற்காக மேலாளருக்கு பொது அதிகார பத்திரம் கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சீட்டு நிறுவனத்தின் இசை இல்லாமல் மேலாளர் தன்னுடைய தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்று இருக்கிறார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது மற்றும் அவர் தனிப்பட்ட முறையில் பொது அதிகாரம் வாங்கி இருப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றும் சொன்னாள் சரியல்ல. தாவா சொத்துகளுக்கு அருகில் தென்புறத்தில் என் கணவரின் சகோதரி தங்கக்கனியின் வீடு இருக்கிறது என்று சொன்னால் ஆமாம்.

6. ஏற்கனவே இந்த வழக்கில் நாங்கள் ஏற்படுத்திய ஆவணங்களைப் போலவே தங்க கனியும் தான் சொத்திற்கும் நாங்கள் ஆவணங்கள் ஏற்படுத்தி அந்த சோத்தற்கு தங்க கனி ஏற்கனவே நீதிமன்றத்தை அணுகி அவருடைய சொத்துக்களின் பத்திரங்களை நீதிமன்றத்தில் விளம்புவை கேட்டு வாங்கி இருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதைப் பற்றி தெரியாது. இந்த வழக்கில் நான் கேட்டிருக்கும் எதிர் கோரிக்கை எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கும் விளம்புகை பரிகாரம் மற்றும் உறுத்து கட்டளை பரிகாரம் பாதிக்கு கிடைக்கத்தக்கது என்றும் சொன்னால் சரி அல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.